5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்
2. ,, கே. எஸ், அப்துல் வகாப்
3. ,, பி. மாணிக்கம்
4. ,, ஆ. நல்லசிவம்
5. ,, ஆ. பாலசுப்ரமணியம்
6. ,, ஜி. வசந்த பை
7. ,, ஏ. ஆர், தாமோதரன்
8. ,, ச. எஸ். வெங்கடேசன்
9. ,, சி. ஆர். லெட்சுமிகாந்தன்

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

மேலவை விதி 156 (1)-ன் படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர், இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற விதிகளின் 156 (4) விதியின் கீழ் மேலவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்.